# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 9/2014** **நாள் : 19/03/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்
பொதுக்குழு உறுப்பினர்கள்.

## மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

வணக்கம்,

மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு கூட்டம் 2014 ஆம் ஆண்டு **மார்ச் 15,16 ஆகிய தேதிகளில் மத்திய அமைப்பின் தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நெல்லையில் சிறப்பாக நடைபெற்றது.**

### வரவேற்புரை

சங்கத்தின் தலைவர் தோழர் கே. விஜயன் செங்கொடியை ஏற்றிவைத்தார். பொதுக்குழுவில் கலந்து கொண்ட தோழர்களை வரவேற்புக்குழுவின் தலைவரும் நெல்லை மாவட்ட சிஐடியு செயலாளருமான தோழர் ஆர். மோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். மத்திய அமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் கே. ரவிச்சந்திரன் அஞ்சலி தீர்மானத்தை முன் மொழிந்தார்.

பொது செயலாளர் நிகழ்ச்சி நிரலுக்கான ஆலோசனையை முன்மொழிய நிகழ்ச்சி நிரல் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தோழர்கள் வி. மதுசூதனன் (கன்வீனர்), தோழர் ஆர்.சிவராஜ், எஸ். உமாநாத், ஆ. பெருமாள், பி.கோமளாதேவி ஆகியோர் மினிட்ஸ்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

தோழர்கள் எஸ். ராஜேந்திரன் (கன்வீனர்), தி. ஜெய்சங்கர், ஏ. பழனி, வை.பாலசுப்பிரமணியன், எஸ். வண்ணமுத்து, ஐ.எம்.ஆர். கணேசன் ஆகியோர் தீர்மானக்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டு செயல்பட்டனர்.

### தலைமையுரை

மாநில தலைவர் கே. விஜயன் தனது தலைமை உரையில் கோவை மாநாட்டிற்கு பின்னர் நடத்திய இயக்கங்கள் மற்றும் பல்வேறு பணிகள் பற்றி எடுத்துரைத்தார். ஊதிய உயர்வு ஒப்பந்தம் அதில் நாம் இணைந்து நின்றதன் அவசியம் பற்றி எடுத்துரைத்தார். சமீபத்தில் மின்வாரியத்தில்

ஊழியர்களின் பணி நியமனம், அதில் நிலவிய லஞ்ச லாவண்யம் பற்றியும், தற்போது நிலவும் அரசியல் நிலைகள் பற்றியும் விளக்கியதோடு இவைகள் சம்மந்தமாக பல தீர்மானங்களை நிறைவேற்றி அதற்கான இயக்கங்கள் நடத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

ஊழலற்ற, மதவெறிஅற்ற, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிக்கும் அந்நிய மூலதனத்தை எதிர்பார்க்காத வளர்ச்சியை உருவாக்கும் இடதுசாரிகளை நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தையும்,

அனைவருக்கும் மின்சாரம், மின்நுகர்வோர்கள் செலுத்தும் வகையில் மின்கட்டணம் என்ற இரண்டு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## துவக்கவுரை

மாநில பொதுக்குழுவை துவக்கிவைத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற குழு தலைவரும், சிஐடியு-வின் மாநில தலைவருமான தோழர் அ. சவுந்தரராசன் அவர்கள் உழைப்பாளி மக்களின் அனைத்து சக்திகளும் நாடாளுமன்ற தேர்தலை நோக்கி என்ற வாசகத்தோடு துவக்கஉரையில் நாட்டின் வளர்ச்சிக்கு இதுவரை ஆட்சி செய்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை இந்திய மக்கள் சீர்துாக்கி பார்க்க வேண்டும், மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு எவ்வாறு தொழிற்சங்க உரிமையை பறித்தது என்று சொல்லி, உதாரணமாக மாருதி கார் நிறுவனத்தில் தனது உரிமைக்காக போராட்டம் நடத்திய சுமார் 140-க்கும் மேற்பட்டவர்களை கைது செய்து ஜாமீனில் வெளிவர முடியாதபடி சிறையில் அடைத்து தொழிலாளர்களை வஞ்சித்த அரசு தான் மத்திய அரசு. இதற்கு பக்கபலமாகத்தான் நீதிமன்றமும் விளங்கி இவர்களுக்கு ஜாமீன் அளித்தால் வெளிநாட்டு முதலீடு வராதாம் என்று சொல்லும் அளவிற்கு நீதித்துறை சென்றுள்ளதையும் தனது உரையில் குறிப்பிட்டார்.

மின்சாரம், போக்குவரத்து, ரயில்வே போன்ற கேந்திரமான துறைகளை தனியார் மயமாக்கும் முயற்சி, கோதாவரி ஆற்றுப் படுகையை ரிலையன்ஸ்க்கு ஒப்படைத்தது, கட்டுக்கடுங்கா விலைவாசியை மக்கள் மீது ஏவியது மக்களின் நலம் பாராமல் அந்நிய முதலாளிகளின் அடிவருடிகளாக இருப்பதற்கு சாட்சியம் அளிக்கும் விதமாக தேர்தல் அறிவிப்புக்கு முந்தைய நாளில் டீசல் விலையை உயர்த்தி இந்திய அந்நிய பெரு முதலாளிகளுக்கு சேவகம் செய்வதை தொடர்வது, இவை போன்ற நடவடிக்கைகளில் காங்கிரசுக்கும், பி.ஜே.பி-க்கும் கடுகளவு கூட மாற்றுக் கருத்து இல்லாத நிலையை எடுத்துக் கூறினார்.

பாராளுமன்ற தேர்தல் அறிவிப்புக்கு முன்பே மதச்சார்பற்ற அமைப்புகளை ஒருங்கிணைக்கும் முயற்சியை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி முன்கை எடுத்ததையும் விளக்கினார். தமிழ்நாட்டில் இடதுசாரிகள் ஒன்றாக இணைந்து இத்தேர்தலை சந்திக்க உள்ள சூழ்நிலையை விளக்கியதோடு, மின்ஊழியர் மத்திய அமைப்பு ஒரு வலுவான அமைப்பு என்றும் இது கடந்த 40 ஆண்டுக காலத்தில் மின்வாரியத்தில் பணியாற்றிய அத்துக்கூலி தொழிலாளிகளை ஒருங்கிணைத்து போராட்ட களம் பல கண்டு அவர்கள் வாழ்க்கையை மின்துறையோடு இணைத்த போராட்ட பாரம்பரியத்தை விளக்கியதோடு, வெண்மணி நினைவாலய திறப்பு, அதில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக கலந்து கொண்டதையும் விளக்கி மின்ஊழியர் மத்திய அமைப்பு, மின்சார தொழிலாளிகளை திரட்டுவதோடு சாதாரண மக்களை ஈர்க்கும் வகையில் செயலாற்றிட வேண்டும், இதன்மூலம் நிராகரிக்க முடியாத சக்தியாக இடதுசாரிகள் எழுவார்கள் என வாழ்த்தி துவக்கவுரை ஆற்றினார்.

## பொதுச் செயலாளர் அறிக்கை

மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் அவர்கள் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். வேலை அறிக்கையில் கோவையில் நடைபெற்ற 14வது மாநில மாநாட்டிற்கு பின்னர் 15 மாதங்களாக மத்திய அமைப்பு ஆற்றிய பணிகளையும், சென்ற மாநாட்டில் முன்வைக்கப்பட்ட எதிர்கால கடமைகளையும், அதன் அமலாக்கம் சம்மந்தமாகவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

வேலை அறிக்கை சமர்பிக்கும் போது நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு எதிராக நாடு தழுவிய எதிர்ப்பு இயக்கங்களில் மின்ஊழியர்கள் பங்கு பெற்றதையும், குறிப்பாக 2013 பிப்ரவரி 20,21 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட சுயேட்சையாகவும் நாம் எடுத்த நடவடிக்கைகளையும், அதனால் கிடைத்த வெற்றியையும் விளக்கினார். அதுமட்டும் அல்லாமல் இம்முழக்கங்களை முன்வைத்து நடத்திய இயக்கங்களில் மின்ஊழியர்கள் பங்குபெற்றதையும் குறிப்பிட்டார்.

கோவை மாநாட்டில் மின்வாரிய ஊழியர்களின் தீர்க்கப்படாத தேங்கியுள்ள கோரிக்கைகளின் மீது அரசின் வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 5.3.2013 அன்று மாறுபட்ட விதமான போராட்ட வியூகமாக 24 மணிநேர பெருந்திரள் முறையீட்டு அறைகூவல் விடப்பட்டது. அதையொட்டி பேச்சு வார்த்தையை தொடர்ந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலவற்றில் தீர்வு அதன் பின்னர் அப்போராட்டத்தை தள்ளிவைத்தது சம்மந்தமாகவும் விளக்கினார்.

மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வு, அதற்காக கோரிக்கை பட்டியல் வெளியிட்டது. கோரிக்கையை தமிழக சட்டமன்றத்தில் எழுப்பி, வாக்குறுதிகளை பெற்றது இறுதியாக தமிழக முதலமைச்சர் அறிவிப்பினை செய்தது, அறிவிப்பினையொட்டியே தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி பல சரத்துக்களை ஒப்பந்த சரத்தாக சேர்த்து ஒப்பந்தத்தோடு இணைந்து நின்றதையும் விளக்கினார். நவீன தாராள மயக்கொள்கை அமலாக்கம் என்ற பெயரால் போராடிப்பெற்ற உரிமைகளை பறிக்கின்ற இக்கால கட்டத்தில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் தொடர் போராட்டத்திற்கு கிடைத்துள்ள பலன்களை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக நாம் நிர்ணயித்த நன்கொடை விஷயத்தையும் விளக்கினார்.

இடைப்பட்ட காலத்தில் இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய மாநாட்டை காஞ்சி மாநகரில் வெற்றிகரமாக நடத்தியதையும், அதனையொட்டி நடைபெற்ற பிரச்சாரம், கருத்தரங்கம், நிதிவசூல், கண்காட்சி, பேரணி, பொதுக்கூட்டம் போன்றவற்றின் சிறப்பு அம்சங்களை விளக்கியதோடு முதன் முதலில் அரங்க மாநாட்டில் மூன்று வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்ட சிறப்பு அம்சத்தையும் விளக்கினார்.

இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பு துவங்கி 30 ஆண்டு நிறைவு விழா 2014 ஜனவரியில் திருவனந்தபுரத்தில் நடைபெற்றதையும், இதையொட்டியே தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பின் அறைகூவலான மின்சாரம் அடிப்படை உரிமை அதை அளிப்பது அரசின் கடமை, மின்சார சட்டம் 2003ல் மின்ஊழியர்கள் மின்நுகர்வோர்களுக்கு சாதகமான மாற்றங்களை கொண்டு வருவது, மின்துறையில் உழைப்புச் சுரண்டலான ஒப்பந்த தொழிலாளர் மீது தொடுக்கும் தாக்குதலை கண்டிக்கும் வகையில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்த வேண்டும் என்ற

முடிவின் அடிப்படையில் 27.02.2014 அன்று மின்வாரிய தலைமை அலுவலகத்திற்கு முன்னால் மத்திய அமைப்பு, தொழிலாளர் சம்மேளனம், பொறியாளர் சங்கம், பொறியாளர் கழகம் ஆகியவை கூட்டாக நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தையும் விளக்கினார்.

மின்வாரியத்தில் காலிப் பணியிடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டும் என்ற கோரிக்கை வற்புறுத்தலின் அடிப்படையில் மின்வாரியத்தில் காலிபணியிடங்களாக உள்ள கம்பியாளர், வணிக உதவியாளர் காலியிடங்களை நிரப்பி கள உதவியாளர் காலிப்பணியிடங்களை அதிமாக்கி அந்த காலிப் பணியிடங்களில் மின்வாரியத்தில் உள்ள மஸ்தூர்களை கள உதவியாளர்களாக மாற்றுவது 4000 தொழில் நுட்பம் பயின்றவர்களை கள உதவியாளர்களாக பணிநியமனம் செய்வதன் மூலம் காலியுள்ள கள உதவியாளர்கள் பதவியை நிரப்பிட வாரியம் நடவடிக்கை எடுத்தது. இதன் பயனாக 4000 தொழில்நுட்பம் பயின்றவர்கள் மின்வாரியத்தில் பணி அமர்த்தப்பட்டது. இதற்கிடையில் கம்பியாளர், வணிக உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்பிடும் முயற்சிக்கு தடைபெற்ற காரணத்தினால் திட்டமிட்டவாறு கள உதவியாளர்களாக காலிப்பணியிடங்களை முழுமையாக ஏற்படுத்த இயலாமையால் 4660 மஸ்தூர்களை மட்டுமே கள உதவியாளர்களாக பதவி உயர்வு பெறும் சிக்கல் உருவாகி உள்ளதையும் விளக்கினார். மேலும் பதவி உயர்வில் ஏற்பட்ட நீதிமன்ற தடையை அகற்ற மின்ஊழியர் மத்திய அமைப்பு எடுத்த முயற்சிகளை விளக்கினார்.

மின்வாரியத்தில் காலிபணியிடங்களை நிரப்ப நாம் எடுத்த முயற்சியின் விளைவாக 951 தொழில் நுட்ப உதவியாளர்களையும், 1000 கணக்கீட்டாளர்களையும் பணியமர்த்தப் பட்டுள்ளதோடு 900க்கும் மேற்பட்ட கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு அளித்ததையும் விளக்கினார்.

மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு கள உதவியாளர்களாக பணிநியமனம் செய்வது சம்மந்தமாக நீதிமன்றத்தில் நாம் தொடுத்த வழக்கு, அதன் மூலமாக 1219 ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்தூர்களாக பணிநியமனம் செய்யப்பட்டது. மீதம் உள்ளவர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது டெல்லி உச்சநீதிமன்றத்தில் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் சம்மந்தமான வழக்கு, காலித் கமிட்டியில் இடம்பெற்று நிரந்தரம் கிடைக்காதவர்களின் உயர்நீதிமன்ற வழக்கு சம்மந்தமாகவும் இப்போது ஊதிய உயர்வில் அறிவித்துள்ள ஒப்பந்த ஊழியர்களின் கூலி உயர்வான ரூ.120/- லிருந்து ரூ. 250/- என்பதை உடனடியாக ஒப்பந்தம் தொழிலாளிகளுக்கு கிடைக்கச் செய்வது அதிலும் குறிப்பாக அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளுக்கு அதை உடனடியாக கிடைக்கச் செய்வதற்கு நமது கிளை நிர்வாகிகள் எடுக்க வேண்டிய உடன் நடவடிக்கைகள் சம்மந்தமாகவும் விளக்கினார். மேலும் மின்சார உற்பத்தி, விநியோக வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை வாரியம் அங்கீகரித்து சட்டத்தில் சொல்லப்பட்ட சலுகைகளை கிடைக்கச் செய்ய எடுக்க உள்ள நடவடிக்கைகள் பற்றி விளக்கினார்.

இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற சிஐடியு-வின் மாநில மாநாடு, அகில இந்திய மாநாடு, பொறியாளர் அமைப்பின் மாநாடு சம்மந்தமாகவும், அதில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் பங்கையும் விளக்கினார். அதில் இக்காலகட்டத்தில் சகோதர ஆதரவு என்ற நிலையில் ரயில்வே தொழிற் சங்க அங்கீகாரத்திற்கான தேர்தலில் தட்சண ரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் வெற்றிபெறுவதற்கு நாம் ஆற்றிய பணிகள், என்.எல்.சி. பொதுத்துறை பங்குகளை விற்பதற்கு மத்திய

அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் நடத்திய கண்டன இயக்கம், மின்ஊழியர் மத்திய அமைப்பு பண்முக சமூக கண்ணோட்டத்தோடு செயல்படும் அமைப்பு என்பதை நிரூபிக்கும் விதமாக தர்மபுரியில் தலித் மக்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தர்மபுரி கிளையும் அதற்கு பக்கபலமாக மின்ஊழியர் மத்திய அமைப்பின் கிளைகள் உதவியதையும் அறிக்கையில் குறிப்பிட்டார்.

2013 ஆம் ஆண்டு போனஸ் கோரிக்கை அதையொட்டி நாம் நடத்திய இயக்கம், போனஸ் அறிவிப்பு, அதில் நாம் தலையிட்டது. தமிழகம் முழுவதும் 100க்கும் மேற்பட்ட இயக்குநர்கள் வெற்றிபெற்றது 6 சங்கங்களில் தலைவராகவும், 3 சங்கங்களில் நாம் துணைத் தலைவராகவும் பணியாற்றுவதையும் விளக்கியதோடு, தேர்வு செய்யப்பட்ட இயக்குநர்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது சம்மந்தமாக நாம் நடத்திய பயிற்சி வகுப்பு சம்மந்தமாகவும், அது தொடர்ந்து நடத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் போது ஒப்பந்தத்தை அமல்படுத்தும் போது எழுந்த பிரச்சினைகளை நாம் தலையிட்டு தீர்த்து வைத்தது, பொது கட்டுமானத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கி, அந்த ஒப்பந்தத்தோடு இணைந்து நின்றது. மேலும் புனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்க நாம் எடுத்து வரும் முயற்சிகளை விளக்கினார்.

மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஸ்தாபனத்தை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கும் போது நிரந்தர தொழிலாளர்களின் உறுப்பினர் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள உயர்வு, திருப்தி அளிக்கக்கூடிய நிகழ்வாக உள்ளதையும் குறிப்பிட்டு, அதே காலகட்டத்தில் ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவினால் மின்ஊழியர் மத்திய அமைப்பின் ஒட்டுமொத்தமான உறுப்பினர் எண்ணிக்கையில் சிறிது குறைவு ஏற்பட்டுள்ளதையும், அந்த குறைவை நிறைவு செய்து உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்தும் விதமாக இப்போது மின்வாரியத்தில் பணியில் அமர்ந்துள்ள தொழில் நுட்பம் பயின்றவர்கள், (கள உதவியாளர்) தொழில் நுட்ப உதவியாளர், கணக்கீட்டாளர் 2ம் நிலையில் பணியில் சேர்ந்தவர்களை முன் முயற்சி எடுத்து அவர்களை ஸ்தாபனப் படுத்துவதன் மூலம் உறுப்பினர் இடைவெளியை அகற்றி ஸ்தாபன விரிவாக்கத்தை உத்தரவாதம் செய்ய முடியும் என்பதையும் விளக்கினார்.

மாநில மையத்தின் செயல்பாடு, மண்டலத்தின் செயல்பாடு, கிளைகளின் செயல்பாடு, கோட்டங்களின் செயல்பாடு கேட்டகிரி பிரிவினரை செயல்பட வைப்பது. மாநில மையத்திலிருந்து கிடைக்கும் எஸ்.எம்.எஸ், சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை ஊழியர்கள் மத்தியில் உடனுக்குடன் கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார். இவைகளின் அடிப்படையில் செயல்பட்டு நமது உறுப்பினர் இலக்கான 30,000த்தை அடைய முழு முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும், போக்குவரத்து, எழுது பொருள்கள், இன்ன பிற பொருள்களின் விலை ஏற்றத்தை ஈடுசெய்யும் வகையில் சந்தா தொகையை ரூ. 150/-ல் இருந்து ரூ. 250/-ஆக உயர்த்த வேண்டிதன் அவசியத்தையும் வலியுறுத்தி முன்வைத்தார்.

## வரவு-செலவு

மாநில பொருளாளர் தோழர் ஈ. அந்தோணி மத்திய அமைப்பின் 14வது மாநில மாநாட்டிற்கு பின்னர் 2013 ஆம் ஆண்டு அதாவது 31.12.2013 முடிய உள்ள வரவு செலவு கணக்கையும், வரவு - செலவு கணக்குடன் இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பு மாநாட்டின் வரவு செலவு கணக்குகளையும் முன்வைத்தார்.

கிளை கணக்குகளை ஆண்டு வாரியாக தணிக்கை செய்வதற்குண்டான ஏற்பாடுகள் செய்து வருகின்ற நிலையில் சில கிளைகள் 2010 ஆம் ஆண்டு வரவு செலவு கணக்கு தணிக்கை முடிக்காததை குறிப்பிட்டு, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான கிளை கணக்கை தணிக்கை செய்ய கிளைக்கான தணிக்கையாளர்களை நியமனம் செய்துள்ளதோடு, கிளை நிர்வாகிகள் தணிக்கையாளர்களோடு தொடர்பு கொண்டு கிளை கணக்குகள் தணிக்கையை முடித்திட வேண்டும் என்றும் கிளைகளில் உறுப்பினர் சந்தாவை வசூலித்த ஒரு மாத காலத்திற்குள்ளாக அடிக்கட்டையையும் ஈவுத் தொகையையும் மாநில மையத்திற்கு அனுப்பிட வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார். மேலும் கிளையின் வரவு செலவு கணக்குகளை பொருளாளர் தான் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மின்கதிர் மாத இதழின் வரவு - செலவு கணக்கை அதன் பொறுப்பாளர் தோழர் எம். வெங்கடேசன் முன்வைத்தார். 2011 ஆம் ஆண்டில் கூடிய பொதுக்குழுவில் உறுப்பினர் ஆண்டு சந்தாவை உயர்த்தியதன் அடிப்படையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் மின்கதிர் பத்திரிக்கை விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இன்றுவரை மின்கதிர் பத்திரிக்கை ஊழியர்கள் மத்தியில் 26,000 பிரதிகள் கொண்டு செல்லப்படுகிறது. ஆசிரியர் குழு மாதம் ஒரு முறை கூடுவதும், குழுவில் அங்கம் பெற்றுள்ள அனைவரும் மின்கதிர் படைப்பாளராக மாறியுள்ளதையும், மின்கதிரின் தரத்தை உயர்த்த மின்கதிர் ஆசிரியர் குழு முயற்சிக்கும் என்றும் மின்கதிர் வரவு - செலவு கணக்குகளை முன்மொழிந்து பேசிய போது வரவைவிட செலவு அதிகமாக உள்ளதையும் அதை ஈடு செய்யும் வகையில் மத்திய அமைப்பின் ஆண்டு சந்தாவை ரூபாய் 200/-லிருந்து ரூ. 250/-ஆக உயர்த்தி அதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு இடைவெளியை ஈடுசெய்யலாம் என்ற ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது.

குடும்பநல பாதுகாப்பு திட்ட வரவு செலவு கணக்குகளையும் பணப்பயன்கன் அளிப்பது சம்மந்தமான விவரங்களையும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் திட்டத்தின் பொருளாளர் தோழர் டி.சி. கமலக்கண்ணன் முன்வைத்தார். மேலும் தனது அறிக்கையில் கோவை மாநில மாநாட்டிற்கு பின்னர் இதுவரை 300 உறுப்பினர்கள் மட்டுமே புதியதாக இணைந்துள்ளனர். ஆனால் மாநாட்டிற்கு பின்னர் மரணமடைந்த 41 தோழர்களின் வாரிசுகளுக்கு பணப்பயன் வழங்கியது ரூ. 3,79,500/- ஆகவும் ஓய்வு பெற்ற 103 தோழர்களுக்கு கொடுக்க வேண்டிய பயன்கள் அதிகரித்துள்ள நிலையில் புதிய உறுப்பினர்களை திட்டமிட்டு சேர்ப்பதன் மூலமே இத்திட்டத்தை தொடர்ந்து நடத்திட இயலும் அந்த அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட பகுதி நேர பணியாளர்கள், புதியதாக மின் வாரியத்தில் இணைத்துக் கொண்டுள்ள ஊழியர்களை இத்திட்டத்தில் சேர்ப்பதன் மூலமே இத் திட்டத்தை தொடர்ந்து நடத்திட இயலும் என குறிப்பிட்டார்.

## வாழ்த்துரை

மின்ஊழியர் மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் எஸ். பஞ்சரத்னம் அவர்களும், மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் தோழர் எஸ். ஜெகதீசன் ஆகியோரும் வாழ்த்துரையில் ஸ்தாபன விரிவாக்கம், ஒன்றுபட்டு பல இயக்கங்களை நடத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி இருவரும் வாழ்த்துரை வழங்கினர்.

பொதுக்குழுவில் 306 குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர், பொதுச் செயலாளர் அறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீது 65 தோழர்கள் 7 மணி நேரம் 13 நிமிடம் விவாதத்தில் ஈடுபட்டனர்.

விவாதத்திற்கு இடையில் தமிழ்மாநில சிஐடியு-வின் பொதுச் செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன் அவர்களும் உதவி பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்களும் பொதுக்குழுவை வாழ்த்தி உரையாற்றினர்.

## தீர்மானங்கள்

மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கைகள், மின்நுகர்வோர்கள் நலன்கள் பாதுகாப்பு சம்மந்தமாக பொதுக்குழுவில் வந்த 20 தீர்மானங்களை தீர்மானக் குழுவின் கன்வினர் தோழர் எஸ்.ராஜேந்திரன் முன்மொழிய  முன்மொழிந்த தீர்மானங்களை தோழர் ஆர். ஸ்ரீதர் அவர்கள் வழிமொழிய பலத்த கரஒலிக்கிடையில் அனைத்து தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### விவாத்திற்கு பின்னர் கீழ்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன

1. **நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஊழலற்ற, மதச்சார்பற்ற, பொதுத்துறையை பாதுகாக்கும் இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றிபெற அனைத்து வேலைகளிலும் ஈடுபடுவது.**

2. **ஊதிய உயர்வுக்காக நாம் எடுத்த நடவடிக்கைகள் அதன் பலனாக கிடைத்த ஊதிய உயர்வின் பலன்களையும் நாடாளுமன்ற தேர்தலில் நமது அணுகுமுறை, தேர்தல் பணிகள் சம்மந்தமாக ஊழியர்கள் மத்தியில் விளக்குகின்ற வகையில் பேரவை கூட்டங்களை ஏப்ரல் 10க்குள் நடத்தி முடிப்பது.**

3. **கூட்டுறவு நாணய சங்க தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களின் பணிகளை செழுமைப்படுத்தும் விதமாக ஏற்கனவே நடத்தியதைப் போல இயக்குநர்கள் கூட்டத்தை தொடர்ந்து நடத்திடுவது.**

4. **களப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வு சம்மந்தமாக பி.எம்.எஸ் பொற்றுள்ள தற்காலிக தடையை நீக்கி பதவி உயர்வு வழங்க தொடர்ந்து ஏற்பாடு செய்வது.**

5. **4660 மஸ்துார்களை கள உதவியாளராக பதவி உயர்வு வழங்குவதில் தேர்தல் அறிவிப்பு தலையீட்டுதலில் சிறப்பு அனுமதி பெற்று பதவி உயர்வை அனைவருக்கும் கிடைக்கச் செய்வது.**

6. மீதமுள்ள மஸ்துார்களுக்கும், களஉதவியாளர் பதவியையும், கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் இருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுப்பது.

7. கணக்கீட்டுப் பிரிவில் உதவி மதிப்பீட்டு அலுவலருக்கு மேலும் பதவி உயர்வு கிடைக்கும் வகையில் புதிய பதவிகளை உருவாக்க முயற்சி எடுப்பது.

8. களப்பிரிவு ஊழியர்களின் கேட்டகிரி குழு கூட்டத்தை உடனடியாக நடத்தி இருவழிப்பாதை, ஒரு வழிப்பாதை பதவி உயர்வுக்கான தகுந்த ஆலோசனைகளை பெற்று வாரியத்திற்கு அளித்து பேச்சு வார்த்தையை தொடர்வது.

9. புனல் மின்திட்டத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வுக்கான புதிய பதவிகளை விரைவாக அனுமதிக்க முயற்சிப்பது.

10. பகுதிநேர ஊழியர்களுக்கு புதிய பதவிகளை அனுமதிப்பது சம்மந்தமாக திட்டங்களில் இருந்து வந்த ஆலோசனைகளை கணக்கில் கொண்டு புதிய பதவிகளை அனுமதிக்கச் செய்வது.

11. ஜூலை மாதம் முதல் வாரத்தில் மண்டல வாரியான தொழிற் சங்க வகுப்புகளை நடத்துவது.

12. 2013 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தும் வகையில் விடுபட்டு போன சந்தாக்களை வசூலிப்பது, வசூலித்த சந்தாக்களை 5.4.2014-க்குள் சேர்த்து உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்துவது.

13. 2014 ஆம் ஆண்டு மின்வாரியத்தில் வந்துள்ள புதிய ஊழியர் வரவுகளான 30,000 ஊழியர்களை உறுப்பினராக்கி ஸ்தாபனப்படுத்துவது.

14. ஆண்டு சந்தா ரூ. 150/-ஐ ரூ. 250/- ஆக உயர்த்தி 2015 ஆம் ஆண்டு முதல் அமல் படுத்துவது.

15. கேட்டகிரி குழு கூட்டங்களை உடனடியாக நடத்துவது.

## ஸ்தாபனம்

★ வட்ட வாரியான மையம் அமைப்பது.

★ கிளை கூட்டங்களை மாதம் ஒரு முறை நடத்துவது,

★ மூன்று மாதத்திற்கு ஒரு முறை மண்டலக் குழு கூட்டங்களை நடத்துவது,

★ கோட்டக்குழுக்களை அமைப்பது செயல்பட வைப்பது,

★ காலநிலை பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்துவது

இவைகள் அனைத்தையும் நடத்துவது குறித்து பொறுப்பேற்றுள்ள மாநில நிர்வாகிகள் உத்தரவாதப்படுத்துவது.

- ★ **உழைக்கும் பெண்கள், கலைக்குழுவை புனரமைக்க முயற்சிப்பது,**
- ★ **பொறியாளர் அமைப்பு, ஓய்வு பெற்றோர் நல அமைப்புகளை துவங்காத கிளைகள் உடனடியாக துவங்க நடவடிக்கை எடுப்பது.**
- ★ **ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் மின்கதிரை படிக்கும் ஆர்வத்தை உருவாக்கும் வகையில் வட்டங்கள் தோறும் வாசகர் வட்டங்களை உருவாக்குவது.**
- ★ **குடும்பநல பாதுகாப்பு திட்டத்தில் புதிய உறுப்பினர்களை சேர்க்க முயற்சிப்பது.**

மேற்கூறிய அனைத்து முயற்சிகளையும் உயிரோட்டமாக அமல்படுத்த செய்வது.

நிறைவாக வரவேற்புக்குழு செயலாளரும் திட்டசெயலாளருமான தோழர் எம்.பீர்முகமதுஷா அவர்களின் நன்றியுரையுடன் பொதுக்குழு நிறைவுற்றது.

தோழமையுள்ள



**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

# பேரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் மாநில நிர்வாகிகள்

**சென்னை வடக்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 1. | வடசென்னை | ஆர். சிவராஜ் |
| 2. | மத்திய சென்னை | கே. அருள்செல்வன் |

**சென்ன தெற்கு மண்டலம்**

| | | |
|---|---|---|
| 3. | மேற்கு சென்னை | கே. விஜயன் |
| 4. | தென்சென்னை | தி. அறிவழகன் |
| 5. | செங்கல்பட்டு | கே. அம்பிகாபதி |

**வேலூர் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 6. | காஞ்சிபுரம் | எம். வெங்கடேசன் |
| 7. | வேலூர் | எம். தனலட்சுமி |
| 8. | திருப்பத்துார் | ஆர். ஸ்ரீதர் |
| 9. | தர்மபுரி | எஸ். ராஜேந்திரன் |

**விழுப்புரம் மண்டலம்**

| | | |
|---|---|---|
| 10. | விழுப்புரம் | ஏ. பழனி |
| 11. | கடலூர் | ஈ. அந்தோணி |
| 12. | திருவண்ணாமலை | தி. ஜெய்சங்கர் |
| 13. | கள்ளக்குறிச்சி | வி. இளங்கோ |

**திருச்சி மண்டலம்**

| | | |
|---|---|---|
| 14. | பெரம்பலூர் | கோ. மோகன்ராஜ் |
| 15. | திருச்சி/மாநகர் | டி. கோபாலகிருஷ்ணன் |
| 16. | கரூர் | பி.கே. சிவக்குமார் |
| 17. | புதுக்கோட்டை | ஐ.எம்.ஆர். கணேசன் |
| 18. | தஞ்சாவூர் | டி. பழனிவேல் |
| 19. | நாகப்பட்டிணம் | டி. ஸ்ரீதர் |

**மதுரை மண்டலம்**

| | | |
|---|---|---|
| 20. | மதுரை | ஜி. ராமகிருஷ்ணன் |
| 21. | மதுரை மாநகர் | வி. பாலசுப்பிரமணியன் |
| 22. | தேனி | பேரவை நடத்தப்பட்டது |
| 23. | ராமநாதபுரம் | பேரவை நடத்தப்பட்டது |
| 24. | சிவகங்கை | து. கோவிந்தராஜு |
| 25. | திண்டுக்கல் | பேரவை நடத்தப்பட்டது |

| | | |
|---|---|---|
| **திருநெல்வேலி மண்டலம்** | | |
| 26. | விருதுநகர் | சி. ஜோதிமணி |
| 27. | திருநெல்வேலி | பேரவை நடத்தப்பட்டது |
| 28. | தூத்துக்குடி | ஆர். குருவேல் |
| 29. | கன்னியாகுமரி | பேரவை நடத்தப்பட்டது |
| **கோவை மண்டலம்** | | |
| 30. | நீலகிரி | எம். பன்னீர்செல்வம் |
| 31. | கோவைதெற்கு | |
| 32. | கோவைவடக்கு | எஸ்.எஸ்.சுப்பிரமணியன் |
| 33. | கோவை மாநகர் | |
| 34. | திருப்பூர் | கே. ரவிச்சந்திரன் |
| 35. | உடுமலைபேட்டை | எச். ஜான்சௌந்தரராஜ் |
| **ஈரோடு மண்டலம்** | | |
| 36. | சேலம் | வி. மதுசூதனன் |
| 37. | மேட்டூர் | எஸ். வண்ணமுத்து |
| 38. | ஈரோடு | கே. ரவிச்சந்திரன் |
| 39. | கோபி | எஸ். ஆனந்தன் |
| 40. | நாமக்கல் | ஆர். ரவிக்குமார் |
| **அனல் மின்நிலையங்கள்** | | |
| 41. | வடசென்னை அனல் | தி. ஜெய்சங்கர் |
| 42. | எண்ணூார் | தி. ஜெய்சங்கர் |
| 43. | மேட்டூர் அனல் | எஸ். வண்ணமுத்து |
| 44. | தூத்துக்குடி அனல் | பேரவை நடத்தப்பட்டது |
| **புனல் மின்நிலையங்கள்** | | |
| 45. | ஈரோடுஉற்பத்தி | வி. வீரணன் |
| 46. | காடம்பாறை | ஆர். குருவேல் |
| 47. | குந்தா உற்பத்தி | வி. மதுசூதனன் |
| 48. | நெல்லைஉற்பத்தி | |
| 49. | காற்றாலைபண்ணை | |
| 50. | பொதுகட்டுமானம் | ஏ. பழனி |
| 51. | தலைமையகம் | |